**<u>Step Together தகவல் பாதுகாப்புக் குறித்த தகவல்கள்</u>**

இந்த உதவியழைப்புக்கு (ஹெல்ப்லைனுக்கு) நீங்கள் வழங்கும், உங்களுடைய அந்தரங்க, மற்றும் எந்தவிதத் தகவலும் கண்ணியத்துடன் பேணப்படும். உங்களை அநாமதேயமாக வைத்திருக்குமாறு நீங்கள் கோரலாம், மேலும் நாங்கள் சட்ட அமுலாக்கத்துடன் தொடர்புடையவர்கள் அல்லர். அனைத்து ஆதரவுச் சேவைகளையும் போலவே, பாதுகாப்பிற்கு எந்தவொரு உடனடி ஆபத்துகளும் ஏற்படுவது குறித்து நாங்கள் அறிந்தால், அதனைக் கவனித்துக் கொள்ள வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது, ஆனால் எல்லாத் தகவல்களும் NSW அந்தரங்கத் தகவல் பாதுகாப்புச் சட்டப் பிரகாரமே கையாளப்படுகின்றன.

## நான் Step Together -இன் தொலைபேசி உதவி இணைப்பினை அழைக்கும் அதே வேளை, அநாமதேயமாக இருக்க முடியுமா?

ஆம், Step Together ஒரு இரகசிய ஆதரவுச் சேவையாக இருப்பதனால், உங்களை அநாமதேயமாக வைத்திருக்குமாறு நீங்கள் கேட்கலாம். உங்களுக்குத் தேவையான உதவியைப் பெற்றுக் கொள்ளுமுகமாக, சில தகவல்களை வழங்குதல் அவசியமாக இருக்கலாம். ஆனால் இத்தகைய தகவல்கள் தனிநபர் தகவல்களாக வகைப்படுத்தப்படுவதுடன், 'Department of Communities and Justice' (சமூகங்கள் மற்றும் நீதித் திணைக்களம்) -இனது அந்தரங்க முகாமைத் திட்டத்திற்கு அமைவாக பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்படுகின்ற அழைப்புகள் பதிவு செய்யப்பட்டு, பாதுகாப்பாகச் சேமிக்கப்படுகின்றன, மேலும் அவை பராமரிப்புக் கடமை, தரம் மற்றும் பயிற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். கிரிமினல் குற்றங்கள், சிறார்களுக்கு உடனடியாக நடக்கவுள்ள ஆபத்து அல்லது பாதுகாப்பு தொடர்பான பிற உடனடி ஆபத்து போன்றவை அறிவிக்கப்படுகையில், மூன்றாம் தரப்பினருக்குத் தகவல்கள் வெளிப்படுத்தப்படலாம். *Crimes Act 1900* -இன் 316 -ஆவது பிரிவின் படி கடுமையான, வழக்கு தொடுக்கப்பட இயலுமான குற்றச்சாட்டுகள் தொடர்பான அறிவுப்புகளைச் செய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

## என்னைப் பற்றிய தகவல்களுக்கு என்ன ஆகும்?

ப: நாங்கள் சேகரிக்கும் எந்தத் தகவல்களும் உங்கள் வினவலுக்கான மிகவும் சாத்தியமான உதவியினை வழங்குவதற்குப் பயன்படும். அத்துடன், இது NSW -இனது அந்தரங்கத் தகவல் பாதுகாப்புச் சட்டத்திற்கமைவாக இருப்பில் வைக்கப்படும். தகவல்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும் ஒரு துரித தலையீட்டுச் சேவை என்ற முறையில், சட்ட அமுலாக்கத் துறையினரது ஈடுபாடு குறித்த அச்சமின்றி நீங்கள் Step Together -இடமிருந்து தகவல்களையும், ஆதரவுதவியையும் பெற முடியும். உங்கள் அடையாளத்தைப் பதிவு செய்யக்கூடாது என்றும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். எவ்வாறாயினும், உங்களுடைய அல்லது பிறருடைய உயிருக்கு, உடல்நலத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு அல்லது ஒரு பால்ய வயதினருக்குக் கணிசமான தீங்கு ஏற்படும் அபாயம், அல்லது ஒரு தீவிர அச்சுறுத்தலைப் பற்றி எங்களுக்குத் தெரியவந்தால், அவசர சேவைகளை அல்லது காவல்துறையினரைத் தொடர்பு கொள்ளுமாறு நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம், அத்துடன், நாங்களும் அவ்வாறு செய்ய வேண்டி ஏற்படலாம்.

# அந்தரங்கத் தகவல் பாதுகாப்பு அறிவிப்பு

தனிப்பட்ட மற்றும் சுகாதார தகவல்களைச் சேகரித்தல், சேமித்தல், பயன்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்துதல் முதலானவை NSW அரசாங்கத்தின் அந்தரங்கத் தகவல் பாதுகாப்பு நடைமுறைகள், *Privacy and Personal Information Protection Act 1998 (NSW)* மற்றும் *Health Records and Information Privacy Act 2002 (NSW)* ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அந்தரங்கத் தகவல் பாதுகாப்புக் கொள்கைகளைக் கொண்டுள்ள இந்தச் சட்டங்கள் எமக்குக் கூறுபவை:

- நாங்கள் என்ன தகவல்களைச் சேகரிக்க முடியும், அவற்றை நாங்கள் எவ்வாறு சேகரிப்போம்
- தனிப்பட்ட மற்றும் சுகாதாரத் தகவல்களை நாங்கள் எவ்வாறு சேமிக்கின்றோம், மற்றும் பாதுகாக்கிறோம்
- நாங்கள் இருப்பில் வைத்திருக்கும் தகவல்கள் எவை என்பதை நீங்கள் எவ்வாறு தெரிந்துகொள்ளலாம் மற்றும், அவை பிழையாக இருந்தால் அதை எவ்வாறு சரிசெய்யலாம்
- உடல்நலம் மற்றும் பிற உணர்வுசார் தகவல்களுக்கான விஷேட பாதுகாப்புக்குட்பட்ட உங்களுடைய தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் மற்றும் வெளிப்படுத்தலாம்
- உங்களுடைய அந்தரங்கத்தின் மீதான மீறல்கள் குறித்து நீங்கள் எவ்வாறு புகார் செய்யலாம்.

ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட மற்றும் சுகாதாரத் தகவல்களைச் சேகரித்து, முகாமைப்படுத்தும்போது, Department of Communities and Justice (திணைக்களம்) - இற்கும், அதனுடன் தொடர்புபட்ட முகமைளுக்கும் இந்த அந்தரங்கத் தகவல் பாதுகாப்பு அறிவிப்பானது பொருந்தும். உங்களிடமிருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரிடமிருந்தோ நாங்கள் சேகரிக்கும் தகவல்கள், சேவைகளை வழங்குவதற்கும் எங்கள் சட்டப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் ‘திணைக்கள’த்தினால் இருப்பில் வைக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும். நாங்கள் சேவைகளை வழங்கும் வழிகளை மேம்படுத்துவதற்கும், திட்டமிடுவதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், உங்கள் தகவல்களை நாங்கள் திணைக்களத்திற்குள் முழுமையாகப் பயன்படுத்தலாம். சில சூழ்நிலைகளில், வெளி அமைப்புகளுக்குத் தகவல்களை வெளிப்படுத்த ‘திணைக்களத்திற்கு’ சட்டப்பூர்வமாக அதிகாரம் உண்டு.

**உங்கள் அந்தரங்கத் தகவல் பாதுகாப்பு உரிமைகள் பற்றிய மேலதிகத் தகவல்கள்:**

- தொலைபேசி: 02 9716 2662
- தொலைத் தட்டச்சு (TTY): 02 9377 6167
- மின்னஞ்சல்: privacy@facs.nsw.gov.au
- 

திணைக்களத்துடைய Privacy Policy PDF, 191.86 KB -ஆனது, திணைக்களத்தின் தனிப்பட்ட மற்றும் சுகாதார தகவல்களைக் கையாளும் நடைமுறைகளைக் கோடிட்டுக் காண்பிக்கிறது. தனிப்பட்ட மற்றும் சுகாதார தகவல்கள், மற்றும் சேகரிக்கப்பட்ட பிற தரவுகளுடன் ‘திணைக்களம்’ எவ்வாறு கையாள்கிறது என்பதையும் இது விவரிக்கிறது. ‘திணைக்களத்தின்’ அந்தரங்கத் தகவல் பாதுகாப்புக் கொள்கையானது, தனிப்பட்ட மற்றும் சுகாதார தகவல்களைத் திணைக்களம் எவ்வாறு நிர்வகிக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டும் ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. நாங்கள் சேகரிக்கும் தகவல்களை பொறுப்புடனும், உரிய முறையிலும் நிர்வகிப்பதற்கும், எங்களுடைய பங்காளர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுசன உறுப்பினர்களின் அந்தரங்கங்களைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

‘திணைக்களம்’ சமீபத்தில் தனது Privacy Management Plan PDF, 302.45 KB -ஐப் புதுப்பித்துள்ளது, இது *Privacy and Personal Information Protection Act 1998* மற்றும் *Health Records and Information Privacy Act 2002* ஆகியவற்றின் கீழான கடமைகளுடன், ‘திணைக்களம்’ எவ்வாறு இயைபுறுகிறது என்பதை விளக்குகிறது. இந்த வலைத்தளத்தில் பகிரங்கமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய அனைத்துப் பக்கங்களுக்கும் இந்த அந்தரங்க அறிக்கையானது பொருந்தும். இந்த வலைத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள ‘திணைக்களம்’-சாராத் தளங்களின் அந்தரங்கக் கொள்கைகள் அல்லது நடைமுறைகள் தொடர்பில் ‘திணைக்களத்திற்கு’ எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த அந்தரங்கத் தகவல் பாதுகாப்புக் கொள்கையின் பிரயோகம் அல்லது தகவல் அணுகல் வேண்டுகோள்கள் தொடர்பான கேள்விகள் எழுத்து மூலமாக அனுப்பப்பட வேண்டும்:

**Open Government, Information and Privacy Unit**
Department of Communities and Justice
Locked Bag 4028
Ashfield NSW 2131